18BTA64C- UIII

பெயர்:க.சு.சிவகாமசுந்தரி

துறை: தமிழ்த்துறை

வகுப்பு: இளங்கலை மூன்றாமாண்டு

பாடம்:தமிழக வரலாறும் மக்களும்பண்பாடும் – II

பாடக்குறியீடு:18BTA64C

**அலகு 3**

## பிற்காலப் பாண்டியர் ஏற்றமும் வீழ்ச்சியும்- நாயக்கர் காலம்

### பிற்காலப் பாண்டியர் எழுச்சி

சோழப் பேரரசுக்கு திறை செலுத்தும் நாடாக அடங்கி நின்ற பாண்டிய அரசு கிபி 1218 இல் மூன்றாம் குலோத்துங்கன் இறந்தபின் திறை செலுத்தாமல் தன் வலிமை பெற்றது. அது முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆகியோரது திறமையும் ஆற்றலும் மிக்க ஆட்சியால் புது எழுச்சி பெற்றது. இக்கால பாண்டியரின் எழுச்சி குலசேகரபாண்டியன் அது மக்களாகிய சுந்தரபாண்டியன் வீரபாண்டியன் ஆகியோர் புரிந்த அரசுரிமைப் போர்களால் வீழ்ச்சிப் பாதைக்குத் தடம்புரண்டது . மாலிக்காபூர் தலைமையில் நடைபெற்ற முஸ்லிம் படையெடுப்பு அவ்வீழ்ச்சியை விரைவுபடுத்தியது.

### முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கிபி 1216 – 1238)

- கிபி 1216 முதல் 1238 வரை பாண்டிய நாட்டை ஆண்டவர் முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன். இவனது மெய்க்கீர்த்தி பூமருவிய திருமடந்தையும் புவி மடந்தையும் புயத்து இருப்ப எனத் தொடங்குகிறது.
- சோணாடு கொண்டருளிய சுந்தரபாண்டியன் என்ற இவனது சிறப்பு பெயர் சோழர் வீழ்ச்சிக்கான காரணத்தையும் பாண்டியர் எழுச்சிக்கான பின்புலத்தையும் பறைசாற்றி நிற்கின்றது இவன் அரசு கட்டில் ஏறிய போதே இப்போது நடைபெற்று இருக்கவேண்டும் என்பது புலனாகிறது.
- மூன்றாம் குலோத்துங்க சோழன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து நிகழ்த்திய அழிவு வேலைகளுக்கும் தனது அண்ணன் சடையவர்மன் குலசேகர பாண்டியனை அவன் இழிவுபடுத்திய செயலுக்கும் பழிவாங்கும் நோக்கம் கொண்டது சுந்தரபாண்டியன் அது சோழநாட்டு படையெடுப்பு வாய்ப்பை எதிர்நோக்கிகாலம் கருதி இருந்த சுந்தரபாண்டியன் கிபி 1219 சோழ நாட்டின் மீது படையெடுத்தான்.

- முதுமையால் தளர்ந்திருந்த மூன்றாம் குலோத்துங்கனும் இளவரசனாக விளங்கிய மூன்றாம் ராஜராஜனும் நாட்டைவிட்டு துரத்தப்பட்டனர்
- சோழரின் பழைய தலைநகரங்கள் ஆகிய உரை இவரும் தஞ்சையும் கைப்பற்றப்பட்டன.
- உருத்திரங்கண்ணனாருக்குக் கரிகாலன் பரிசளித்த பதினாறு கால் மண்டபம் தவிர அனைத்து இடங்களும் இடித்து அழிக்கப்பட்டன என திருவெள்ளறைக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது
- சுந்தரபாண்டியனின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொள்ள மூன்றாம் ராஜராஜன் இசைந்தான். எனினும் ஹொய்சலரின் துணை கிடைத்த போது அவன் பாண்டியருக்குத் திறை செலுத்த மறுத்தான். இதனால் சுந்தரபாண்டியன் சோழ நாட்டின் மீது கிபி 1831 இல் மீண்டும் போர் தொடுக்க நேர்ந்தது. இப்போரில் மூன்றாம் ராஜராஜன் கடும் தோல்வியையும் பெரும் செல்வ இழப்பையும் எதிர்கொண்டான். சோழன் மீது பெற்ற முதல் வெற்றியின் போது வீராபிஷேகம் செய்து கொண்ட சுந்தரபாண்டியன் இரண்டாவது வெற்றியின் போது முடிகொண்ட சோழபுரத்தில் விஜயாபிஷேகம் செய்து கொண்டான்.

**முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (1251 - 1271)**

- தென்னிந்தியாவின் மிகச்சிறந்த அரசர்களுள் ஒருவன் என புகழப்படுபவர் முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன்.கிபி1751 இல் முடிசூடிய இவனது ஆட்சிக்காலத்தில் சோழநாடு சேரநாடு மகத நாடு கொங்கு நாடு ஓய் செல்லம் சிங்கம் ஆகியவை பாண்டியர் ஆட்சிக்கு உட்பட்டு நின்றன இவனிடம் தோல்வியுற்ற சோழமன்னன் ராஜேந்திரன் ஆண்டுதோறும் திறை செலுத்த இசைந்தான். சிங்களர்களும் அஞ்சி திரை செலுத்தி நின்றனர் ஹொய்சாளர்கள் மைசூர் பீடபூமிக்குள் அடை பட்டனர் கிபி 1262 ஒரு சிலருடன் நடத்திய இரண்டாவது போரில் அந்நாட்டு மன்னன் சோமேஸ்வரன் கிபி ஆயிரத்து 262 க்கும் 1624 க்கும் இடையில் சிங்களவருடன் நடத்திய இரண்டாவது போரில் அந்நாட்டு இளவரசனும் கொல்லப்பட்டனர் இப் போர்களில் பெற்ற வெற்றிக்குப்பின் சடையவர்மன் சுந்தரபாண்டியன் மண்டலமும் கொண்டருளிய சுந்தரபாண்டியன் எனவும் எல்லாம் தலையான பெருமாள் எனவும் உன்னை பெயர்களை சூடிக் கொண்டான் போர்களில் கிட்டிய செல்வதால் தில்லை நடராஜர் கோவிலுக்கும் திருவரங்கப் பெருமாள் கோவிலுக்கும் பொன்னை வேய்ந்து புகழ் சூடிக் கொண்டான்.

**மாலிக்காபூர் படையெடுப்பும் பாண்டியர் வீழ்ச்சியும்**

முதல் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆளும் முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் நாளும் தோற்றுவிக்கப்பட்ட பிற்காலப் பாண்டியர் எழுச்சி மிக விரைவில் வீழ்ச்சியை நோக்கி விரைந்தது. அவற்றில் மாலிகாபூர் தலையிட்டுச் செய்த அட்டூழியங்களும் பாண்டியரின் வீழ்ச்சிக்கு முக்கியக் காரணங்களாக இருந்தன. உரிமைப்போர் முதல்

மாறவர்மன் குலசேகர பாண்டியன் காலத்தில் நிகழ்ந்தது.அயலவர் படையெடுப்பிற்கும் வசதி செய்து தந்தது.

- பாண்டியனது வீழ்ச்சி பற்றியும் அதன் காரணங்கள் பற்றியும் அமீர் குசுரு,வாஸப் ,பர்னி, இபின் பதூதா பெருசா ஆகிய சமகால வரலாற்றாசிரியர்களும், டாக்டர் ராய் ,எலியட், ஸ்மித், எஸ் கே அய்யங்கார், சதாசிவ பண்டாரத்தார், நீலகண்ட சாஸ்திரி, கே கே பிள்ளை, ராசு காளிதாஸ் ஆகிய இக்கால வரலாற்றாசிரியர்களும் ஆய்வு நடத்தியுள்ளனர்.

**பாண்டியரது அரசுரிமைப்போர் தோன்றிய பின்புலம்**

- கிபி 1268இல் பாண்டிய அரசின் பட்டத்திற்கு வந்தவன் குலசேகர பாண்டியன். அவனுக்கு சுந்தரபாண்டியன் வீரபாண்டியன் என்ற இரு மக்கள் இருந்தனர். முன்னவன் பட்டத்தரசி முறைப்படி பிறந்தவன். குலசேகரபாண்டியன் சுந்தர பாண்டியனுக்கு பட்டம் சூட்டல் முறைதவறி பிறந்த வீரபாண்டியனுக்கு முடிசூட்டினான். இதனால் சினம் கொண்ட சுந்தர பாண்டியன் தனது தந்தை குலசேகர பாண்டியனை கொன்று 1310 அரியணை ஏறினான்.இதனால் வீரபாண்டியனுக்கு சுந்தர பாண்டியனுக்கும் பெரும்பகை நேர்ந்தது.

**முஸ்லீம் படையெடுப்பின் தொடக்கம்**

- **வீரபாண்டியனின் எதிர்ப்பை சமாளிக்க முடியாத** சுந்தரபாண்டியன் இப்போரில் தனக்கு உதவுமாறு டெல்லி சுல்தான் இடம் வேண்டுகோள் விடுத்தான்.துவார சமுத்திரத்தில் மாலிக்காபூரைச் சந்தித்து உதவியை நாடி இருக்கலாம்.
- இயல்பாகவே வாய்ப்பை எதிர்பார்த்திருந்த மாலிக்காபூர் படையுடன் வந்து சுந்தரபாண்டியன் வீரபாண்டியன் ஆகிய இருவரையும் தாக்கி கருவூலங்களை கொள்ளையிட்டான்
- இந்து அறநிலைய எங்களை படுத்தி திரும்பிய மாலிக்காபூர் மதுரையை ஆண்டு கொண்டிருந்த சுந்தர பாண்டியன் மீது கிபி 1311 இல் போர் தொடுத்தான் இதனை முன்கூட்டியே அறிந்த சுந்தர பாண்டியன் நெப்போலியனின் படையெடுப்பின்போது மாஸ்கோவை விட்டு சென்ற உருசுர்களைப் போல படையெடுத்து வந்தவர்களிடம் கலைச் செல்வங்களை விட்டுவிட்டு அரச குடும்பத்துடன் தப்பி சென்றான் ஏமாற்றத்தை சரி அந்த மாலிக்காபூர் பெரும் சினம் கொண்டு மதுரை முழுவதையும் கொள்ளையடித்து மீனாட்சி அம்மன் கோவிலில் தீ வைத்தான்.
- தமிழகத்தில் முஸ்லிம் ஆட்சி
- கிபி 12ஆம் நூற்றாண்டில் டெல்லியில் சுல்தான் ஆட்சி நிறுவப்பட்டதுகைப்பற்றுவதில் மட்டுமே அவனது ஆசையை நிலைத்திருந்தது

மாலிக்காபூரின் தென்னக படையெடுப்புகள்

- அலாவுதீனின் அடிமையாகிய மாலிக்காபூர் தலைமையில் தென்னகப் படையெடுப்பு கிபி 1307 இல் தொடங்கியதுஅலாவுதீன் கில்ஜி இறந்ததும் மாலிக்காபூர் அவர்களை சிறையில் அடைத்து விட்டு அரியணை ஏறினான் எனினும் 35 நாட்களில் அவன் கொல்லப்பட்டான் அலாவுதீன் மகன் முபாரக் ஷா அடுத்து டெல்லி சுல்தான் அவனது படைத் தலைவன் குஸ்ருகான் தலைமையில் கிபி 1317 இல் முஸ்லிம் படை தமிழகம் நோக்கி வந்தது குஸ்ருகான் மதுரையில் சில ஆண்டுகள் தங்கியிருந்தான்.
- தென்னக இந்து அரசுகளை ஒழித்து இஸ்லாம் சமயத்தை பரப்பும் நோக்கம் உடன் கிபி 1321இல் முகமது பின் துக்ளக் தென்னகம் நோக்கி படையெடுத்தான்.முஸ்லிம் படை மதுரை மீது தாக்குதல் நடத்தி அதன் அரசனாகிய பராக்கிரம பாண்டியன் ஐ கைது செய்தது மதுரை முஸ்லிம் ஆட்சிக்குள் அடங்கிய ஒரு மண்டலம் ஆக்கப்பட்டது. முஸ்லிம் அரசு சார்பாளர் அங்கு நியமிக்கப்பட்டார்.
- ஹொய்சாள மன்னன் மூன்றாம் வல்லாலனும், கபாய நாயக்கனும் முஸ்லிம் ஆதிக்கத்தில் இருந்த தமிழகத்தை விடுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.தொண்டை மண்டலத்தை தாக்கி வெற்றி கண்டனர் இதில் மதுரையை ஆண்ட சுல்தான் ஜலலுதீன் அசந்தா கொல்லப்பட்டான் அவனை அடுத்து அலாவுதீன் மதுரை சுல்தான் ஆக்கப்பட்டான்அவனும் வீர வல்லாளன் நாள் தோற்கடிக்கப்பட்டான்.
- மதுரையில் அடுத்த சுல்தானாக கியாசுதீன் பொறுப்பேற்றான் அவன் இந்துக்களின் எழுச்சியை கருவறுக்க திட்டமிட்டு ஹொய்சளர் மீது திடீர் தாக்குதல் நிகழ்த்தினான் வீர வல்லாளன் ஆனால் இதற்கு ஈடு கொடுக்க முடியவில்லை வல்லாளன் கொலைசெய்யப்பட்டு கோட்டைச் சுவரில் தொங்க விடப்பட்டான். முஸ்லிம்களின் சார்பாளர் ஆட்சி கிபி ஆயிரத்து 378 வரை மதுரையில் நடைபெற்றது கிபி ஆயிரத்து 362 விஜயநகரப் பேரரசனான குமார கம்பணன் மதுரையை தாக்கி அங்கு ஆட்சி புரிந்த முஸ்லிம் சார்பாக முபாரக் சாவை தோற்கடித்தான் எனினும் கிபி 1378 வரை மதுரையில் முஸ்லிம் ஆட்சி நடைபெற்றதாக அறிகின்றோம்.
- கி.பி.1378இல் இரண்டாம் புக்கர் செய்த தாக்குதல் மதுரையில் இருந்த முஸ்லிம் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது.

**நாயக்கர் காலம்**

**விஜயநகரத்தின் தோற்றமும் இந்துசமயப் புத்துயிர்ப்பும்**

- முஸ்லிம் ஆட்சி இடமிருந்து இந்து சமயத்தை காப்பது பண்பாட்டினை காப்பது எனும் நோக்கங்களுடன் தோற்றுவிக்கப்பட்டது விஜயநகரப் பேரரசு. இந்து சமய ப் புத்துயிர்ப்புக்கு வழிகோலியது எனலாம்.

- குமார கம்பனின் மனைவி கங்காதேவி வடமொழியில் எழுதிய மதுரா விஷயம் என்ற நூலும் அப்துல் ரசாக் நூல் சீவல் நிக்கோலோ காண்டி , பர்போசா ,பேயிஸ் ஆகியோரது குறிப்புகளும் விஜயநகரப் பேரரசின் வரலாற்றை அறிய பெரிதும் துணை நிற்கின்றன.
- டெல்லி சுல்தானின் நம்பிக்கைக்கு உரியவர்களாக இருண்ட ஹரிஹரன் புக்கன் ஆகியோர் சுல்தானின் நலன்களை கவனித்துக் கொள்ளவும் கம்பிலியில் கலகங்களை அடக்கவும் அங்கு அனுப்பப்பட்டனர் பல இடங்களையும் கைப்பற்றி அவர்கள் இந்து பண்பாட்டை முஸ்லிம் தாக்குதலின் இன்று காக்கும் பெரும் பொறுப்பை ஏற்க முடிவு செய்து தன்னாட்சி பெற்றதாக அறிவித்து துங்கபத்ரா ஆற்றங்கரையில் கிபி 1336 விஜயநகரை நிறுவினர்.
- விஜயநகரப் பேரரசை சங்கம மரபு சார்ந்த மரபு துளுவ மரபு அரவிடு மரபு ஆகிய நான்கு மரபுகள் ஆட்சி புரிந்தனர்
- பேரரசை நிறுவிய முதலாம் ஹரிஹரன் சங்கம மரபினன் அவன் காகதிய நிர்வாக முறையை பின்பற்றி பேரரசின் நிர்வாக அமைப்பை ஏற்படுத்தினர் அவனை அடுத்து 20 ஆண்டுகாலம் பேரில் வீற்றிருந்த காலத்தில் பேரரசை விரிவுபடுத்தும் பணி நடைபெற்றது.
- புக்கண்ணுடைய மகன்குமார கம்பணன் மதுரையில் இருந்த சுல்தான் ஆட்சியை ஒலித்தது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த செய்தியாக மதிக்கப்படுகிறது இவர்கள் அனைவரும் சங்கம மரபை சார்ந்தவர்கள்.
- சந்திரகிரி ஆளுநராக இருந்தவனும் சாலுவ மரபைச் சார்ந்த வனமான நரசிம்மன் திறமையற்ற சங்கம மரபு அரசனான குருடராய் அணை அகற்றிவிட்டு பேரரசின் ஆட்சியை கைப்பற்றினான் ஆனால் அவனது படைத் தலைவனாக இருந்தவனும் துளுவ மரபை சார்ந்தவனுமாகிய நரச நாயக்கன் நரசிம்மனை சிறைபிடித்துவிட்டுப் பேரரசன் ஆனான்.
- நரச நாயக்கன் அடுத்து 1509 இல் கிருஷ்ணதேவராயன் ஆட்சிபீடம் ஏறினான் விஜயநகரத்தின் மிகச்சிறந்த காலமாக கருதப்பட்டது இவனது காலமாகும் எப்போதும் வெற்றியை பெற்று திகழ்ந்த இவனது காலத்தில் வடக்கே துங்கபத்திரை முதல் தெற்கே குமரி முனை வரை விஜயநகரப் பேரரசு பரவி நின்றது ஒரிசா உதயகிரி கலிங்கம் ராய்ச்சூர் பிஜப்பூர் ஆகிய பகுதிகள் விஜயநகர பேரரசு கீழ் கொண்டுவரப்பட்டன. விஜயநகர வீழ்ச்சி
- கிருஷ்ணதேவராயன் க்குப்பின் அச்சுதராயர் வந்தான் அவனை அடுத்து வந்த சதாசிவராயர் காலத்தில் பேரரசு முழுவதும் உள்நாட்டுக் குழப்பங்கள் மிகுந்தன பெயரளவுக்கு அரசனாக விளங்க அரசியல் பொறுப்புகள் அனைத்தும் அமைச்சர் ராம ராயன் இடம் இருந்தன 1565 இல் ஏற்பட்ட தலைக்கோட்டைப் போர் விஜயநகர மறந்துபோன பேரரசாக மாற்றியமைத்தது ராமராஜனின் செருக்கு மிகுந்த நடத்தை நீண்டகாலமாக புகைந்து கொண்டிருந்த தக்காண சுல்தான்களின்

பகைமையை கிளறி விட்டது அவனது இரு முஸ்லிம் படைத்தலைவர்கள் செய்த துரோகமும் பிஜபூர் கோல்கொண்டா ஆகிய முஸ்லிம் நாடுகள் தென்னகத்தை வெல்வதை எளிதாக செய்துவிட்டன போரில் ராமராயர் சிறைபிடிக்கப்பட்டு தலை வெட்டப்பட்டு ஈட்டி முனையில் தொங்கவிடப்பட்டது. அழிவிலிருந்து விஜயநகரம் மீளவே இல்லை பிற்காலத்தில் செய்த முயற்சிகளும் பலனளிக்கவில்லை.

**நாயக்க மன்னர்கள்**

- தமிழக வரலாற்றில் கிபி 1529 முதல் 1736 வரை 207 ஆண்டுகள் நாயக்கர் ஆட்சி நடைபெற்றது விஸ்வநாத நாயக்கன் முதல் அரசி மீனாட்சி வரை 13 பேர் இக்காலத்தில் ஆட்சி புரிந்தனர். இவர்களுள் பாளையப்பட்டு என்னும் புதிய நிர்வாக முறையை அறிமுகப்படுத்தினார் விஸ்வநாத நாயக்கரும் ஆட்சி பரப்பிலும் அரிய கலை படைப்பிலும் சிறந்து விளங்கி தன்னுரிமை பெற்ற முதல் நாயக்க மன்னன் என்ற முறையில் திருமலை நாயக்க மன்னனும் பெண்ணரசி என்ற முறையில் மங்கம்மாளும் நாயக்க மன்னர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

**விஸ்வநாத நாயக்க மன்னன் கிபி** (**1529**-1564)

- மதுரையில் புகழ்பெற்ற நாயக்க மரபினர் ஆட்சி தொடங்கிய பெருமை விஸ்வநாதனை சாரும் பாளையப்பட்டு என்னும் ஆட்சி முறை தளவாய் அரியநாத னின் அறிவுரையின்படி இவனால் தோற்றுவிக்கப்பட்டது போர்க்காலம் ஆகிய இரண்டு சூழலுக்கும் பயன்படும் விதத்தில் இம்முறை உருவாக்கப்பட்டது உள்ளூராட்சி முறைக்கு மாற்றாக இது அளிக்கப்பட்டது திருச்சியில் உள்ள தெப்பக்குளமும் மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் உள்ள ஆயிரங்கால் மண்டபமும் விசுவநாதன் முயற்சியால் உருவானவை மதுரை மீனாட்சி அம்மன் கோவிலையும் திருச்சி தாயுமானவர் கோவிலையும் திருப்பணி செய்தான். திருவரங்கப் பெருமாள் கோயிலுக்கு 300 ஆயிரம் பொன் செலவிட்டான்.
- **திருமலை நாயக்க மன்னன்** ( கிபி **1623- 1659**)
- **சங்ககாலம் பல்லவர் காலம் சோழர் காலம் நாயக்கர் காலம் ஆகிய நான்கும் தமிழக வரலாற்றில் மிக மேம்பட்ட காலங்களாக போற்றப்படுகின்றன இவற்றுள் நாயக்கர் காலம் மனித மனத்தின் உயர்வு காலம் என வர்ணிக்கப்படுகிறது உயர்வுக்கு முதலும் முடிவுமாக விளங்கியவன் திருமலை நாயக்க மன்னன் எனலாம்.**
- திருமலை சவுரி நாயினு அய்யலுகாரு என்னும் பெயரையுடைய இவன் கிபி 1625 முதல் 1659 வரை ஆட்சி புரிந்தான். திண்டுக்கல், திருநெல்வேலி, திருவனந்தபுரத்தில் ஒரு பகுதி, திருச்சி, மதுரை,

இராமநாதபுரம், கோவை, சேலம், சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய பகுதிகள் இவனது ஆட்சிக்கு உட்பட்டு இருந்தன.

- 1.விஜயநகரப்பேரரசின் சார்பு ஆட்சியாக விளங்கிய அரசைத் தன்னுரிமை பெற்ற தனி அரசாக மாற்றி அமைத்த பெருமை திருமலை நாயக்க மன்னனே சாரும். பேரரசின் தாக்குதலில் என்று விலகி நிற்கும் நோக்குடன் திரிசிரபுரத்தில் இருந்து மதுரைக்குத் தலைநகரை மாற்றி அமைத்தான்.
- 2. மதுரையை ஒரு கலைக்கூடமாக ஆக்கிய பெருமை இவருக்குரியது. மதுரை தெப்பக்குளம் புது மண்டபம் ராய கோபுரம் மீனாட்சி அம்மன் கோயிலுக்குள் அமைக்கப்பட்டுள்ள முக்குருணி.பிள்ளையார் கோவில் ஆகியவை இவரது படைப்புகள்.
- 3. மதுரையை விழவுமலி மூதூர் மீண்டும் ஒருமுறை ஆக்கியவன் தெப்பத் திருவிழாவும் சித்திரைத் திருவிழாவும் வசந்த விழாவும் இவன் காலத்தில் புதிதாக தொடங்கப்பட்டவை.
- 4. கிருத்துவ சமயம் பரப்ப வந்த மேனாட்டு குழுக்களுக்கு ஆதரவு தந்து தனது சமய பெருந்தன்மையை நிலைநாட்டியவர் சைவக் கடவுளாகிய மீனாட்சிக்கும் வைணவ கடவுளாகிய கள்ளழகருக்கும் எடுக்கப்பட்ட விழாக்களை சித்திரை திருவிழாவாக ஒன்றிணைத்து ஒரு சமய பொது நோக்கை உருவாக்க முயன்றவன்.
- 5. மதுரையை ஆண்ட மன்னர்களுள் எண்ணற்ற செயல்திறன் வாய்ந்தவன் என சத்தியநாத யாராலும் உயர்ந்த புகழைப் பெற்றவன் என பெட்ரண்ட் பாதிரியாரும் புகழப்பட்டவர்
- மைசூர் போர், மூக்கறுப்பு போர், திருவாங்கூர் படையெடுப்பு, சேதுபதியுடன் செய்த போர், விஜயநகர பேரரசு உடன் செய்த போர் ஆகியவை திருமலை மன்னன் செய்த முக்கிய போர்கள் ஆகும்.
மங்கம்மாள்(கி.பி **1689- 1706**)
- **திருமலை நாயக்க** மன்னனின் பேரனாகிய சொக்கநாதன் இன் மனைவி மங்கம்மாள் விஜயரங்க சொக்கநாதன் சிறு குழந்தையாக இருந்தபோது அவரது தந்தை முத்துவீரப்பன் இறந்துவிட்டதால் அக்குழந்தையின் சார்பில் அவனது பாட்டி மங்கம்மாள் கிபி ஆயிரத்து 689 முதல் 1086 வரையில் அரசாண்டால் இக்காலத்தில் டெல்லியின் அவர்களின் ஆட்சி நடைபெற்று வந்தது சிவாஜியின் மறைவுக்குப்பின் அவன் தென்னக படையெடுப்பை முழுவீச்சில் மேற்கொண்டான் தஞ்சை செஞ்சி மரணத்தை வென்று நின்ற முகலாயரின் படை ஆற்றலையும் தனது பலவீனத்தையும் சீர்தூக்கிப் பார்த்த மங்கம்மாள் திரை செலுத்த இசைந்து வெறும் பொருள் பரிசுகளை டெல்லி மன்னனுக்கு கொடுத்தனுப்பினார்.
- **மைசூர் மன்னன் மதுரை மீது படை தொடுத்த வாய்ப்பை பயன்படுத்தி மராட்டியர் மைசூர் மீது படையெடுத்து வர மங்கம்மாள்**

மைசூர் மன்னனை வெற்றி கொள்ளக் காரணமாக அமைந்தார்.மங்கம்மாள் அது ஆற்றலும் ராஜதந்திரமும் நாயக்கர் ஆட்சிக்கு நீண்ட ஆயுட் காலத்தை தந்தன புயலும் கொந்தளிப்பு மிகுந்த அரசியல் சூழலில் கவனம் மிகுந்த எவ்வளவு ஆட்சி முறை அவளது பெருமையை பலமுறை பறைசாற்றுகின்றன.

- பாழையப்பட்டு ஆட்சிமுறையும் அதிகாரங்களும் அதில் காணப்பட்ட குறைபாடுகளும் நீதித்துறை ராணுவ செயல்பாடுகளும் நாயக்கர் கால அரசியல் நிலையை விவரித்து நிற்கின்றன.